**தலைப்பு 198 - நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 198 – நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 செப்தெம்பர் 11 ஆந் திகதி அமைச்சின் செயலாளாருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 13,703.21 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் வரையில் இதில் ரூபா 5,592.9 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட தேறிய மொத்த நிதி ஏற்பாடுகளில் ரூபா 8,110.22 மில்லியன் அல்லது 59.18 சதவீதம் மிகையாக செலவாகியிருந்தது. விபரம் பின்வருமாறு.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 434.59 | 408.37 | 26.22 | 6.03 |
| மூலதனம் | 13,268.62 | 5,184.62 | 8,084.00 | 60.93 |
| **மொத்தம்** | **13,703.21** | **5,592.99** | **8,110.22** | **59.18** |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள எல்லைகள்**

அமைச்சிற்குரிய 19801 ஆம் விடய இலக்கத்தின் கீழான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் பின்வருமாறாகும்.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 8.5 | 8.47 | 6 | 6.96 | 31 | 24.75 |

**2.3 பொது வைப்புக் கணக்குகள்**

அமைச்சின் கீழ் வரும் 3 பொது வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 8.55 மில்லியனாகும். விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன். |
| 6000/0000/00/0013/0148/000 | 0.18 |
| 6000/0000/00/0016/0133/000 | 3.30 |
| 6000/0000/00/0018/0123/000 | 5.07 |
| | 8.55 |

### 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன மேற்படி 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 புத்தகங்களும் பதிவேடுகளும் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| நடைமுறையல்லாச் சொத்து பதிவேடு | நிதிப்பிரமாணம் 502(2) |
| நட்டம் மற்றும் இழப்புப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| மின்சார உபகரணங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |
| கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

### 3.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

அமைச்சிற்கு மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட 04 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் பதிவளிக்கப்பட்டிருக்கவில்லை அந்த ஐயவினாக்களுக்குரிய கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 54.57 மில்லியன் ஆகும்.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம், அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1.60 மில்லியனாக இருந்தது. அந்த நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 20 வருடங்கள் வரையிலான காலவீச்சினைக் கடந்திருந்த போதிலும், அவற்றை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

### 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### உள்ளகக் கணக்காய்வு

அமைச்சின் கீழ் 04 நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவால் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் இரண்டு பொறியியல் உதவியாளர்களை மாத்திரம் உள்ளடக்கியிருந்தது. எனினும், அமைச்சின் பணிப்பொறுப்புக்களுடன் ஒப்பீடு செய்யும் போது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பணிகளை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை போதியளவானதாகக் காணப்படவில்லை.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

ஓட்ட நிலையில் காணப்பட்ட போதும் ஓட்டத்தில் ஈடுபடுத்தாமல் அமைச்சிற்குச் சொந்தமான 06 வாகனங்கள் மற்றும் பழுதுபார்க்கக்கூடிய 05 வாகனங்கள் என்பன நீண்ட காலமாக நீர்ப்பாசன திணைக்களத்தின் வளவில் விளைவற்று தரித்து வைக்கப்பட்டிருந்தன.

### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்தல்

2016 திசெம்பர் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அந்த அறிக்கை 2017 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அமைச்சினால் 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அவ்வறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### (இ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

முறையான உரித்து கையளிக்கப்படாமல் 67 மோட்டார் வாகனங்கள் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கும் 05 வாகனங்கள் நீர் வளங்கள் சபைக்கும் வழங்கப்பட்டிருந்தன.

### (ஈ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்றதாகப் பயன்படுத்தல்

அமைச்சிற்குச் சொந்தமான கொத்மலை சர்வதேச பயிற்சி நிறுவனம், மகாவலி அதிகார சபைக்குரிய காணி மற்றும் கட்டிடங்களில் நடாத்தப்படுவதுடன் அந்தக் காணி மற்றும் கட்டிடங்களில் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2017 செப்தெம்பர் 11 ஆந் திகதி வரையிலும் உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (உ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

அமைச்சினால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 100.67 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அப்பொறுப்புக்கள் தொடர்பாக விபரங்கள் பதிவேட்டில் குறிப்பிடப்படாதிருந்தமையால் காலப் பகுப்பாய்வொன்றைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் இறுதியில் தயாரிக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டுக் கணக்கில் ரூபா 564.18 மில்லியன் தொகையான பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### (ஊ) தேறிய நிதிஏற்பாடு இன்றி பொறுப்புக்களை ஏற்படுத்துதல்

நிதிப்பிரமாணம் 94 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் கடப்பாடுள்ள பொறுப்புக்கள் மற்றும் செலவிடப்பட்ட மொத்த செலவினங்கள் அவ்வாண்டின் தேறிய நிதிஏற்பாட்டை விஞ்சி முடியாதிருந்த போதிலும், தேறிய நிதிஏற்பாட்டு எல்லையை விஞ்சி ரூபா 1.98 மில்லியன் பொறுப்புக்களையும் தேறிய நிதிஏற்பாடின்றி ரூபா 1.43 மில்லியன் பொறுப்புக்களையும் அமைச்சு ஏற்படுத்தியிருந்தது.

**3.6 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 133 | - | உள்ளக்க கணக்காய்வின் நோக்கம், உள்ளகக் கணக்காய்வு பிரிவுகளின் பணிகள் மற்றும் அவற்றின் விடயப்பரப்பு தொடர்பாக முக்கியமான விடயங்கள் நிதிப்பிரமாணங்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், காலநிலைத் தாக்கங்களை குறைக்கும் செயற்திட்டத்தின் உள்ளகக் கணக்காய்விற்காக ஸ்தாபிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வுக் குழு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 139 | 104,997,160 | காலநிலைத் தாக்கங்களை குறைக்கும் செயற்திட்டத்தின் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் சரியான பிரகாரம் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் பரீட்சிக்கப்பட்டு செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 371 | 569,850 | கொத்மலை சர்வதேச பயிற்சி நிறுவனத்தின் உபகட்டுநிதி பதவிநிலைத் தரமற்ற உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருந்தது. |
| (ஆ) அரச நிர்வாகச் சுற்றறிக்கை | | |
| 2007 மே 11 ஆந் திகதிய 09/2007 ஆம் இலக்க சுற்றறிக்கை | 51,948,177 | கொத்மலை சர்வதேச பயிற்சி நிலையத்தில் பயிற்சி நடவடிக்கைகளுக்காக தேவையான |

உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் தனியார் கம்பனியொன்றுடன் உடன்படிக்கை செய்து ஓய்வுபெற்ற உத்தியோகத்தரின் சேவை பெறப்பட்டு சுற்றறிக்கையின் எல்லையை விஞ்சி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்தக்கூடிய ஆகக்கூடிய வயது 67 வருடங்களாக இருந்தமை சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கொத்மலை சர்வதேச பயிற்சி நிறுவகம் அந்த வயதெல்லையை விஞ்சிய இரண்டு உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்தியிருந்தது.

**3.7 வெளிநாட்டுதவி செயற்திட்டம்**

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் வெளிநாட்டு நிதியீட்டத்தின் கீழ் செயற்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருந்தது. அதன் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 3,054 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 2,552.23 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக 2013 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த செயற்திட்டமும் அமைச்சிடம் காணப்பட்டது. இந்த வெளிநாட்டுதவி செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**3.7.1 காலநிலைத் தாக்கங்களைக் குறைக்கும் செயற்திட்டம்**

**(அ) செயற்திட்டத்தின் செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தெரிவு செய்யப்பட்ட 10 நீர் மூலங்களில் முதலீட்டுத் திட்டங்கள் மற்றும் வெள்ள நீர் மற்றும் வறட்சி நிலைக்கான திட்டங்களைத் தயாரிப்பதற்கு திட்டமிடல் பிரிவொன்றை தாபிப்பதற்கும், அந்த பிரிவிற்கு நியமிக்கப்பட்ட நிபுணத்துவ குழுவொன்றுடன் உள்நாட்டு பதவியணியினால் திட்டத்தைத் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 02 நீர்த்தேக்கங்களிற்காக மாத்திரம் முதலீட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(ii) தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்ட 18 பாடசாலைகளின் மண்சரிவு அபாயத்தைக் குறைக்கும் 12 ஒப்பந்தங்களில் 04 ஒப்பந்தங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ஒன்று மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. ஏனைய ஒப்பந்தங்களின் செயன்முன்னேற்றம் 06 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

(iii) வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் வெள்ள நீர் மற்றும் மண்சரிவினால் ஏற்படக்கூடிய வசதியீனங்களை மாற்றியமைப்பதற்கும், அச்சுறுத்தலுக்குள்ளான பாலங்கள் மற்றும் மதகுகளை அபிவிருத்தி செய்வதற்கும் இனங்காணப்பட்ட 09 தொகுதிகள் மற்றும் அச்சுறுத்தலுக்கான 07 சரிவுகளை அபிவிருத்தி

செய்வதற்கும் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. அதில் நெதிமால – பொறலஸ்கமுவ பாலத்தை புனரமைக்கும் செயற்பாடுகள் மற்றும் மட்டக்களப்பு – திருகோணமலை வீதியிலும் மற்றும் கண்டி - மஹியங்கனை வீதியிலும் அபிவிருத்திச் செயற்பாடுகளின் செயல்முன்னேற்றம் 35 சதவீதம் முதல் 85 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

**(ஆ) செயற்திட்டத்தினால் வட மத்திய மாகாணத்தின் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்கள் தொடர்பான களப் பரிசோதனை**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நுவரவெவ தெற்கு வான் பகுதி வாய்க்காலில் இடது பக்கச் சுவர் 05 இடங்களில் உடைந்து காணப்பட்டமையும், அந்த இடத்தில் வாய்க்கால் உட்பகுதியிலிருந்து 1½ அடி உயரத்தில் சுவரில் 05 இடங்களில் நீர்க்கசிவு காணப்பட்டது.

(ii) நுவரவெவ வெளி வான் பகுதி வாய்க்கால் அருகில் பிரயாணம் செய்யும் வீதி 850 மீற்றருக்கு கிரவல் மண் இட்டு செப்பனிட வேண்டிய போதிலும் அந்த வீதியின் ஆரம்பத்தில் 100 மீற்றர் மற்றும் இறுதியில் 250 மீற்றர் என்பன நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. நிர்மணிக்கப்பட்ட வீதியின் ஒரு பகுதியும் மழை நீரால் வெளிவான் பகுதி வாய்க்காலுக்கு பிரயாணம் செய்வதற்கு பொருத்தமான வடிகாண் முறைமையும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) திசாவெவ பிரதான வான்கதவை நிர்மாணித்தல் மற்றும் அபிவிருத்தி செய்யும் பணிகளின் 7 ஆவது வாய்க்கால் மற்றும் விவசாய வீதி நிர்மாணத்தின் போது அந்த நிர்மாணம் 14 மீற்றர்கள் குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டமையினால் அபிவிருத்தியில் எதிர்பார்த்த நலன்கள் பொதுமக்களுக்குக் கிடைத்திருக்கவில்லை.

(iv) அபயவெவ வெளிவான் பகுதி வாய்க்கால் அபிவிருத்தி செய்யும் போது வெளிவான் பகுதி வாய்க்காலை ஆழமாக்கி இருபக்கமும் சுவர்களுக்கு மண் நிரப்பி போதியளவான பிரகாரம் செப்பனிடல் மற்றும் அதற்கு இணையான விவசாய வீதியை அபிவிருத்தி செய்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், 4,925 மீற்றர் நீளமான இந்த வாய்க்கால் வீதியில் தொல்பொருள் அடையாளங்கள் காணப்படுகின்றமையால் 3,117 மீற்றர் நிர்மாணத்தை தொல்பொருள் திணைக்களம் நிறுத்தியிருந்தது. பின்னர் நிர்மாணிக்கப்பட வேண்டிய முறை தொடர்பாக தொல்பொருளியல் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த ஆலோசனையின் படி நடவடிக்கை எடுப்பதற்கு நீர்ப்பாசனத் திணைக்களம் தவறியிருந்தது. மேலும், வாய்க்காலின் இறுதிப்பகுதி அதாவது 3,880 மீற்றர் முதல் 4,925 மீற்றர் வரையான இறுதி 1,045 மீற்றருக்குரிய விவசாய வீதி நிர்மாணிக்கப்படவில்லை.

(v) பதவிய குளத்தின் D16 மற்றும் D17 என்ற வாய்க்கால் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் மிகையான மழைநீரை வெளியேற்றுவதற்கு நிர்மாணிக்கப்பட்ட நீர்க் கட்டுப்பாட்டு வான் கதவுகளிலும் பிரயாணிகள் பாலங்களில் கொங்கிறீட் குறித்த நியமத்தில் இடப்படாதிருந்ததுடன் அவற்றில் இரும்புக் கம்பி வெளிப்பட்டு துருப்பிடித்தலுக்கு உட்பட்டிருந்தது.

**(இ) நோக்கங்களுக்கு முரணாக செலவினங்களைச் செய்தல்**

காலநிலை அபாயங்களுக்காக உட்படுகின்ற மக்கள் மற்றும் சொத்துக்கள் இடர்களுக்கு உட்படுவதைக் குறைத்தல் மற்றும் இன்னல்களுக்கு ஆக்கபூர்வமான தீர்வுகளை காண்பிப்பதற்கு பாதிக்கப்பட்டவரின் இயலளவை அபிவிருத்தி செய்தல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். எனினும், பொலன்னறுவை மாவட்டத்தில் விவசாயிகளுக்கு அறிவிப்பதற்காக நுவரெலியாவில் நடைபெற்ற 03 நாள் செயலமர்வின் போது காலநிலையின் ஆகக்குறைந்த தாக்கங்களுக்கு ஈடுகொடுக்கும் தேவை தொடர்பாக விவசாய சமூகத்திற்கு அறிவூட்டுவதற்காக ஒரு மணித்தியால விரிவுரை மாத்திரம் நடாத்தப்பட்டு 2016 செப்தெம்பர் 20 ஆந் திகதி ரூபா 621,300 தொகையொன்று செயற்திட்டத்தின் நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

**3.7.2 ஏழைகளினது சொத்துக்களின் அபிவிருத்தி மற்றும் அமுல்படுத்தல் செயற்திட்டம்**

**செயற்திட்டத்தைக் கலைத்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இந்த செயற்திட்டம் 2013 ஒக்தோபர் 22 ஆந் திகதி முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும், கலைக்கும் நடவடிக்கைகள் 2017 யூன் 30 ஆந் திகதி வரையில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்ட பணிகளின் கீழ் கொண்டுவரப்படாத மகாவலி அதிகாரசபையின் நீராவிய பண்ணையில் முறையே ரூபா 7,300,000 மற்றும் ரூபா 15,675,310 கிரயத்தில் பூசோ கெப் வண்டி மற்றும் குளிரூட்டியுடன் மழையுடன் பால் உற்பத்திப் பிரிவொன்றும் செயற்திட்டத்தைக் கலைக்கும் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

**3.8 செயலாற்றல்**

**பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்**

நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சின் விடயப் பரப்பெல்லைக் குரித்தற்ற பாதுகாப்பு அமைச்சின் விடயப் பரப்பிற்குரித்தான சீனா அரசாங்கத்தின் முற்தயாரிக்கப்பட்ட கட்டிடங்கள் இறக்குமதி செய்யும் ஒப்பந்தத்திற்காக 2016 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,097.08 மில்லியன் தொகையான நிதிஏற்பாடுகளில் ரூபா 1,091.15 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த பணிக்காக 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 12,442.54 மில்லியன் தொகையான மொத்தச் செலவினமும் அமைச்சினால் செலவிடப்பட்டிருந்தது.

**3.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய வடிவிலானதாக இருந்தன. தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அமைச்சினால் கிங் நில்வளா திசை திருப்பும் செயற்திட்டத்திற்காக ரூபா 4,011.05 மில்லியன் தொகை வேலை ஆரம்பிப்பு முற்பணமாக (Mobilization advance) வெளிநாட்டு கம்பனியொன்றிற்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அக்கம்பனியால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எந்தப் பணிகளும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

வேலை ஆரம்பிப்பு முற்பணமாக ஐ.அ.டொலர் 34.5 மில்லியன் செலுத்த வேண்டியிருந்த போதிலும், ஐ.அ.டொலர் 4.51 மில்லியன் தொகை குறைவாகச் செலுத்தப்பட்டிருந்தது. 2 ½ வருடங்களுக்கு அண்மித்த காலமாக எவ்வித பிரதிபலனுமின்றி வெளிநாட்டுக் கம்பனிக்கு திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டமை சர்ச்சைக்குரிய வடிவிலானதாகக் காணப்பட்டது. காணப்பட்ட நிலையான வட்டி விகிதம் 13 சதவீதமாக எடுப்போமாயின் ஒப்பந்தகார கம்பனிக்கு செலுத்தப்பட்டுள்ள வேலை ஆரம்பிப்பு முற்பண தொகை நிலையான வைப்புக் கணக்கில் 2 ½ வருடங்களுக்கு முதலீடு செய்யப்பட்டிருக்குமாயின் ரூபா 1,303.59 மில்லியன் தொகையான வட்டி வருமானத்தை உழைக்கக் கூடியதாக இருந்தது.

(ஆ) கொத்மலை சர்வதேச பயிற்சி நிறுவனத்திற்கு முதலாவது பயிலுனர் குழுவாக ஐம்பது பேர் சேர்க்கப்பட்டிருந்ததுடன், அவர்களின் பெறுபேறுகள் 2016 யூன் மாதத்தில் விநியோகிக்கப்பட்டிருந்தது. எனினும், 2016 மார்ச் 08 ஆந் திகதி வரையிலும் அவர்களை சேவையில் நியமித்தல் பிரச்சினைகளுடனானதாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) மகாவலி மதியுரைச் சேவைகள் கம்பனியுடன் ஏற்படுத்தப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் நிறுவனத்தின் பயிற்சி நடவடிக்கைகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்த ஓய்வுபெற்ற பொறியியலாளருக்கு எவ்வித அங்கீகாரமுமின்றி வாகனமொன்று சாரதியுடன் வழங்கப்பட்டு எரிபொருள், பழுதுபார்த்தல் செலவினம் என்பவற்றுக்காக மாத்திரம் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ரூபா 593,232 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், 2016 நவம்பர் மாதத்தின் போது மகாவலி மதியுரைச் சேவைக் கம்பனியுடன் சேவை உடன்படிக்கை முடிவடைந்ததன் பின்னரும், உரிய பொறியியலாளருக்கு வழங்கப்பட்டிருந்த வாகனம் திசெம்பர் மாதத்திற்காகவும் வழங்கப்பட்டு எரிபொருளுக்காக ரூபா 22,135 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) ‘‘சிறி தலதா யல் அஸ்வனு’’ பூஜைக்கு பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கு மதிய உணவு வழங்கும் போது ஒருவருக்கு ரூபா 2,500 பெறுமதியுடன் தாமாகவே பகிர்ந்து கொள்ளக்கூடிய 200 உணவுகளும், விவசாய பிரதிநிதிகளுக்கு ஒன்று ரூபா 250 பெறுமதியுடைய 2,000 உணவுப் பார்சல்களும் கிரேண் கெண்டியன் ஹோட்டலிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. ‘‘சிறி தலதா யல் அஸ்வனு’’ பூஜையின் முதன்மைக் குழுவான விவசாய மக்களுக்கு ரூபா 250 தொகையான உணவுப் பார்சல்கள் வழங்கப்பட்டிருக்கும் போது ஒரு உத்தியோகத்தருக்கு தாமாகவே பகிர்ந்து உண்ணக்கூடிய ரூபா 2,500 தொகையான மதிய உணவு வழங்கிய தேவை எத்தகையது என கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) பெறுகைகள் வழிகாட்டிச் செயல் நடைமுறைகளைப் பின்பற்றாமை

(i) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் பெறுகைகள் தொடர்பான விபரங்களைப் பதிவதற்கு பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பெறுகைகள் குழுவின் சகல அங்கத்தவர்களும் ஒன்றிணைந்து பெறுகைகள் தீர்மானம் எடுக்க வேண்டியிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் போது 19

சந்தர்ப்பங்களில் ரூபா 1,429,372 பெறுமதியான பொருட்கள் அவ்வாறு கூட்டாகத் தீர்மானிக்கப்படாமல் பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(ஆ) அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்**

மீளாய்வாண்டின் போது கொத்மலை சர்வதேச பயிற்சி நிறுவகத்தில் 36 சேவைப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டு ரூபா 9,309,225 தொகையான வருமானமொன்று உழைக்கப்பட்டிருந்தது. அரசியலமைப்பின் 149 ஆவது உறுப்புரைக்கு முரணாக அந்த வருமானம் திரட்டு நிதியத்தில் ''செலவு'' வைக்கப்படாமல் பொது வைப்புக் கணக்கில் 'செலவு' வைக்கப்பட்டு செலவிடப்பட்டிருந்தது. நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்குரிய செலவினம் தொடர்பான எந்த அறிக்கையும் பேணப்பட்டிருக்கவில்லை.

**3.11 நிதி மோசடி வடிவிலான கொடுக்கல் வாங்கல்கள்**

வெளிநாட்டு சுற்றுலாவில் ஈடுபட்டிருந்த அமைச்சின் இரண்டு உயர் உத்தியோகத்தர்களுக்கு போலியான பதிவேடொன்றை பயன்படுத்தி ரூபா 1,290,982 தொகையான இணைந்த படிகளும் அமையப் படிகளும் பெற்றிருந்தனர்.

**3.12 முகாமைத்துவ நலிவுகள்**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆம் ஆண்டின் போது பழுதுபார்த்தல் செயற்பாடுகளுக்காக மடாட்டுகம இயந்திர வேலைத் தளத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த நிசான் பேரூந்து வண்டி மற்றும் ஜீப் வண்டி என்பன கையளிக்கப்பட்டு 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டின் போது மடாட்டுகம இயந்திர வேலைத்தளத்தில் பழுதுபார்க்கப்பட்டிருந்த மோட்டார் வாகனம் உரிய பிரகாரம் பழுதுபார்க்கப்படாமையின் காரணமாக மீண்டும் இயந்திர வேலைத்தளத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அந்த வாகனத்தின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு 2017 யூலை 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 நவம்பர் 27 ஆந் திகதி மோட்டார் வாகனமொன்றைப் பழுதுபார்ப்பதற்காக ரூபா 778,500 தொகையான மதிப்பீட்டிற்காக ரூபா 467,100 முற்பணம் மடாட்டுகம இயந்திர வேலைத் தளத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2017 யூலை 31 ஆந் திகதி வரையும் பழுதுபார்க்கப்பட்டு மோட்டார் வாகனம் கையளிக்கப்படாதிருந்ததுடன் 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2013 ஆம் ஆண்டின் போது மடாட்டுகம இயந்திர வேலைத்தளத்திற்கு வாகனமொன்றைப் பழுதுபார்ப்பதற்காக கையளிக்கப்பட்டு ரூபா 330,000 மதிப்பீட்டிற்காக ரூபா 448,200 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு 2017 யூலை வரையிலும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கொத்மலை சர்வதேச பயிற்சி நிறுவக வளாகத்தில் சகல வசதிகளையும் உடைய சுற்றுலா விடுதியொன்று அதிசொகுசு வசதிகளுடன் பராமரிக்கப்பட்டு கடமை நடவடிக்கைகள், விடுமுறை மற்றும் பல்வேறு விழாக்களுக்காக பல்வேறு

உத்தியோகத்தர்களுக்கும், நபர்களுக்கும், குழுக்களுக்கும் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக எதுவித கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ''சிறி தலதா யல் அஸ்வனு'' பூஜைக்காக ரூபா 37,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட உலோக பாத்திரம் மற்றும் ரூபா 57,000 செலவில் பெறப்பட்ட ஹக்குலன மடுவ என்பன களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த இடம் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை. அந்த பூஜைக்காக 26 விவசாய அமைப்புக்களிலிருந்து ரூபா 275,826 தொகையும், அரச உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 25,400 தொகையுமாக ரூபா 306,226 தொகையான பணம் பெறப்பட்டமைக்கு பற்றுச்சீட்டு விநியோகிக்கப்படாதிருந்ததுடன் கணக்குகளிலும் காண்பிக்கப்படவில்லை.

## 3.13 மனித வள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | பற்றாக்குறையான பதவியணியினர் |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 28 | 14 | 14 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 02 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 54 | 32 | 22 |
| (iv) | ஆரம்ப நிலை | 36 | 23 | 13 |
| | **மொத்தம்** | **122** | **71** | **51** |

### (ஆ) வெளித்தரப்பினரிமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனித வளங்கள்

அமைச்சினால் மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் நீர் வளங்கள் சபையிடமிருந்து 06 ஊழியர்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவர்களின் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,354,613 தொகை நீர் வளங்கள் சபையினால் செலுத்தப்பட்டிருந்தது.

### (இ) மனித வள முகாமையாளரை ஆட்சேர்த்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) காலநிலைத் தாக்கங்களைக் குறைக்கும் செயற்திட்டத்திற்காக மனித வள முகாமையாளர் ஒருவர் சேர்க்கப்பட்டு முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இலக்கம் 33 மற்றும் 33-1 இற்கு முரணாக சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) ஆட்சேர்க்கப்பட்ட மனித வள முகாமையாளரின் சேவை நிலைய செயற்திட்ட முகாமைத்துவ அலகாக இருந்த போதிலும், 2015 மே 25 ஆந் திகதி முதல் 2017 மே மாதம் வரை மொனராகலை நீர்ப்பாசன பணிப்பாளர்

அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்டு ரூபா 2,932,799 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) 2016 மார்ச் 24 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 3 ஆவது ஆண்டின் போது செலுத்த வேண்டிய ரூபா 103,000 சம்பளம் முதலாவது ஆண்டிலிருந்து செலுத்தப்பட்டிருந்ததுடன் 2016 மே முதல் 2017 மே வரை ரூபா 96,000 சம்பளமாக மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.